SIR SIVASWAMI AYYAR HIGH SCHOOL
MAGAZINE
TIRUKATTUPALLI.. 1955-56.

T-UN-637

திருக்காட்டுப்பள்ளி

ஸர் சிவஸ்வாமி ஐயர் ஹைஸ்கூல்

ச ஞ் சி கை

1954—55

ஆசிரியர் :

S. R. பாலசுப்பிரமணிய

தலைமை ஆசிரிய

ஸர் சிவஸ்வாமி ஐயர் உயர்

திருக்காட்டுப்பள்ள

CONTENTS

Frontispiece — Sir P. S. Sivaswami Ayyar & Lord Pentland–opening of the New School Buildings 1915.

Foreword — Message by the Hon'ble Mr. Justice P. N. Ramaswami.

The Agniswarar Temple
அக்னீஸ்வரர் கோவில் } S. R. B. 1

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம் 11

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம் 13

எங்கள் ஊர்–திருக்காட்டுப்பள்ளி 15
O. N. இராதாகிருஷ்ணன்

ஸ்ரீ தேபர் ஜி. ஸ்ரீனிவாசன், V. 'C'. 18

Sir Alexander Fleming S. 22

Excursion to Mettur and Bhavani Sagar 23

ஹெலன் கெல்லர் (Helen Keller) 26
R. ராதாகிருஷ்ணன்

கைத்தறி நெசவு R. ஸ்ரீநிவாசன், V. 'C.' 29

இலவ மரம் (Silkcotton Tree) 33
ஆர். கோவிந்தராஜன், எஸ். கிருஷ்ணமூர்த்தி

1954-55 உல்லாசப் பிரயாணம் 36
N. PR. Virappan V. F.

Chidambaram and its Ancient Glory S. R. B. 43

The Neyveli Lignite Project K. K. S. 78

Sir Sivaswami Ayyar High School- 81
Agriculture and Dairy Farm

Congratulate you upon your Success of
Japanese Rice Cultivation. 84
CHUO BOEKI GOSHI KAISHA, Japan.

சிறந்த மல்லன் ஆவது எங்ஙனம்? 86
K. BALASUBRAMANIAM

Sir Sivaswami Ayyar High School
Founder's Day Celebrations 90

Annual Report and School Chronicle. 92

Sir P. S. Sivaswami Ayyar
and
Lord Pentland, Governor of Madras.
Opening of the New School Buildings.
3rd December, 1915.

Message of the
CHAIRMAN, BOARD OF TRUSTEES.

The Hon'ble Mr. Justice
P. N. RAMASWAMI
I.C.S.

'VINNAGAR'
1/4 Edward Elliott Road,
MADRAS-4.

As Chairman of the Board of Trustees, it is my pleasure and privilege to send you a short message on this auspicious occasion. On behalf of the Board I send a most hearty welcome to our Director of Public Instruction, an old and esteemed friend of this institution. We are sure that under his fostering and discriminating care, our institution will thrive and render increased service to the public.

The year under review has been one of uniform progress. Both our curricular and extra-curricular activities have been impressive. For this our thanks are due to the devoted service of the Headmaster and the staff and the old pupils of the school.

The running of the Hostel continues to occupy the foremost place in the thought of the Board. My uncle Sir Sivaswami Ayyar was always anxious that it should be a model institution of its kind. Till now, we have been able, thanks to the ceaseless effort of Sri S. R. Balasubrahmanya Ayyar and a band of teachers, to carry out the wishes of my uncle. But the Board feels that the circle of helpers must expand and every member of the staff should take the same interest and contribute his best towards the successful running of the Hostel.

The farm is playing an increased part in the school and hostel life and it is our hope that we shall be able to add the Engineering Course to the existing Agricultural and Secretarial Courses. It is

our endeavour to make the school a multi-purpose one.

For realising our objective, the construction of the Sudharma Hall is a desideratum. If Government are pleased to sanction the maximum grant possible to them under the rules, for which we seek the help of our esteemed friend, the President of our Celebrations, and the public in and around Tirukattupalli, and our well-wishers and friends contribute their mite, the Trust Board will not lag behind in pushing through the project and achieve it in the nearest possible future.

On behalf of the Trust Board, I have much pleasure in thanking the Headmaster and the staff for the year of good work and convey to them my heartiest good wishes for continued good work.

JAI HIND!

P. N. RAMASWAMI.

AGNISVARAR TEMPLE
Tirukattupalli



MAIN SHRINE GROUND PLAN

TIRUKATTUPALLI AGNISWARAR TEMPLE



(Image of the Goddess)

Bogisvari (Copper image of Goddess kept in the Ardhamandapa)



Nataraja and his consort. Originally of the Vandayampatti temple now in the Agniswarar temple, Tirukattupalli.

Chandrasekhara and his consort.

THE AGNISWARAR TEMPLE

TIRUKATTUPALLI

Tirukattupalli had a great past. Its temple is very ancient. The suffix **palli** of this name indicates that it should have been a settlement of the Jains or the home of a college of Jain Scholars. And in proof thereof, I was able to discover a mutilated stone image of **Mahavira** found in the irrigation channel at Vishnampettai village, a mile to the south of Tirukattupalli. This icon is now housed in the premises of the High School.

The earliest reference to the Siva temple in this place is found in the Tevaram hymns of **Gnana Sambandar** and **Appar** who belong to the **7th century A. D.**, the contemporaries of the Pallava King Mahendra Varman (600 A. D. to 630 A. D.) In this period, the place should have been surrounded by jungles and groves inhabited by huntsmen. This is referred to in Appar's song. (கானவேடர் கருதுங் காட்டுப்பள்ளி). He also refers to the existence of learned men in this place (கற்றவர்கள் கருதும் காட்டுப்பள்ளி) It is also mentioned that the presiding deity is worshipped by the Sun God. (காலையே தொழுங் காட்டுப் பள்ளியுறை நீலகண்டனை).

Perhaps the specific condemnation of the Buddhists and Jains in the tenth stanza of Sambandar's hymns - though this is usually found in all his hymns relating to other places too - may refer to the victory of Saivism over Jainism prevalent in this area. It may be re-called in this connection that the Pallava King Mahendravarman became converted from Jainism to Saivism by Saint Appar and that the King erected the big rock - cut temple at Tiruchirapalli dedicated to Siva to commemorate this great event of his life.

The present structure of the Agniswarar temple has the features of an early Chola temple of the Pre-Parantaka age - 9th century A. D. - like the temples of Niyamam, Sendalai, Tiruvaiyaru and Tillaisthanam. It is a temple built entirely of stone from the basement to the **Stupi** - a **Karrali** (கற்றளி). The earliest part of the temple consisted of the **Garbhagraham** superimposed by the stone **Vimana** and ending in the **Stupi** and of the **Artha mandapa** just in front. The two dwarapalakas which should have been originally placed in the niches at both sides of the main entrance to the Arthamandapa should have been removed at the time of the building of the Mukhamandapa and placed higher up in the surrounding verandah of the Mukhamandapa at a later date. The sanctum is almost a square (6'-8" by 6'-9"). At the basement there is a frieze of yalis. The temple faces the **East** and during the equinoxes, the rays of the rising sun will fall on the Linga. We have icons of Dakshinamurti, Ardhanari and Brahma on the other three sides of the

sanctum. These original stone figures of the old temple have been replaced by later stone images, but the stone figure of the original Yoga Dakshinamurti in the upper layer found on the Vimana, included in the illustration, is in a good state of preservation. It bears out its antiquity. As in early Chola temples, we have a frieze of Bhutaganas below the **Kodungai** (caves). The figures of bulls, lions and tigers are found at the various corners adjoining the Bhutagana frieze. The tiger is significant, as it is the **lanchana** of the Chola kings. From the archeological features described above, we can attribute this temple to the period of Aditya Chola I (871 - 907 A. D.) in whose time it is said - according to the Anbil copper plates of the Cholas - that a large number of stone temples were built on both banks of the Cauveri from the Sahyadri mountains (the Western Ghats) to the sea. To strengthen this, I have to mention the existence of a fragmentary stone inscription - which is now embedded in the southern basement of the main (outer) Gopuram. It mentions the name of **Ko-Irajakesari Parumar** and it may be assigned to the late 9th century A. D. (or early 10th) and it relates to a gift of sheep for supplying one **Olakku** of ghee for the burning of a perpetual lamp. There are also two or three fragments of inscriptions of the 9th century scattered in different parts of the temple.

The Amman Shrine was a later addition in the days of Ko-Maravarman Sundara Pandya of Madurai who reigned in the 13th century A.D. and who had the title of **Sonadu Valangiya** who

(took and then) gave away the Chola country after defeating the Chola Ruler. There are two Pandyan inscriptions on the basement of this shrine. It is said in one of them that, in the 7th year of this Pandyan ruler (i.e.) 1216+7=1223 A.D., the idol of the Goddess called "Tirukkamakkottam Udaiya Periya Nachiyar **Alagar Mangaiyar**" was consecrated and a shrine was built and lands situated in the village of Maraneri alias Dinachintamani Chaturvedimangalam and Mullaikkudi were gifted by one Kottur - Udaiyan Udayam Cheydan Vigna Vinayakan alias Sembiyan Pallavaraiyan a **Madhyasthan** of Brahmadheya, Kottur in Manni Nadu situated in Virudarajabhayankara Valanadu.

And in the second inscription in the 13th year of perhaps the same king in 1229 A. D. mention is made of some more gifts as tax free devadhana lands - for services to the same shrine. The lands were situated in the villages of Maran Eri alias Dina Chintamani Chaturvedimangalam, Onbatirruveli (modern Onbattuveli) and Mullaikkudi.

There is a mandapa in front of this Amman temple, a late structure, and one of the pillars of this mandapa contains an inscription of the 13th year of the great Chola Emperor Raja Raja I (acc. 985 A. D.) It mentions a gift of paddy and the King is referred to as "**Salai-kalam Arutha Ko-raja Rajakesaripanmar**" - This is a reference to the title of Raja Raja I after his defeat of the Chera fleet at **Kundalur Salai.** We are not in a position

to state to which shrine or part of a temple this inscribed stone originally belonged.

In the 16th century in the days of King Tirumala of the Aravidu dynasty of Vijayanagar (1570-71 A. D.) certain royal taxes are made over to the deity of the local temple.

All the copper images found in the temple are illustrated here. Some of them - Manikka-vasagar, Chandesvarar, Nataraja are of exquisite workmanship.

These are the few glimpses we get about the temple from the inscriptions on it.

[S.R.B.]

திருக்காட்டுப்பள்ளி

அக்நீசுவரர் கோவில்

மேலத்திருக்காட்டுப்பள்ளி மிகப் புராதனமான ஊர். இவ்வூரிலுள்ள அக்நீசுவரர் கோவிலும் பழம் பெருமை வாய்ந்தது. இவ்வூர்ப்பெயரின் 'பள்ளி' என்ற முடிவைக்கொண்டு இது பண்டைக்காலத்தில் சமணருடைய இருப்பிடமாக இருக்கவேண்டும் என்று கருதலாம். சமண குருவான மகாவீரரின் கற்சிலையொன்று இவ்வூருக்கருகேயுள்ள விஷ்ணம்பேட்டையிலிருந்து கிடைத்துளது, இச்சிலை நமது பள்ளிக்கூடத்தில் தற்காலம் இடம்பெற்றுள்ளது.

இக்கோயில் சைவ சமய நாயன்மார்களது திருப்பாசுரங்களைப் பெற்றது. அப்பரும், திருஞானசம்பந்தரும் இத்தலப் பெருமானைப் பாடியுள்ளனர். இந்நாயன்மார்களின் காலம் பல்லவ மன்னரான மகேந்திரவர்மர் ஆண்ட கி. பி. ஏழாம் நூற்றாண்டாகும். அப்பர் இவ்வூரைக் "கானவேடர் கருதுங் காட்டுப் பள்ளி" என்றும், "கற்றவர்கள் கருதுங் காட்டுப் பள்ளி" என்றும் சிறப்பித்துள்ளார். "காலையே தொழுங் காட்டுப் பள்ளியுறை நீலகண்டனை" என்று அப்பர் வர்ணித்துள்ளதை நோக்க இது சூரியனால் பூசிக்கப்பட்ட தலம் என்று கருத இடமுண்டு.

கருப்பகிரகமும் அர்த்தமண்டபமுமே இக்கோயிலின் பழைய பாகமாகும். இக்கோயில் ஒரு கற்றளி. கருப்பகிரகம் முதல் விமானம் ஸ்தூபிமுடிய யாவும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. இப்பழைய கோயிலைச் சார்ந்த துவார பாலகர்களை அவர்களுடைய பழைய இடத்தை விட்டுப் பெயர்த்து முன்மண்டபத்தில் வைத்துள்ளார்கள். கருப்ப கிரகம் சதுர வடிவமானது.

அடியில் யாளிவரிசையையும், கொடுங்கையின் அடியில் பூதகண வரிசையையும் காணலாம். இடையே புலி, சிங்கம், ரிஷபம் முதலிய சிலைகள் காணப்படுகின்றன. இக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியை உடையது. தக்ஷிணாமூர்த்தி, அர்த்தநாரி, பிரமன் இவர்களுடைய கற்சிலைகள் கருப்பகிரகத்தைச் சுற்றிலுமுள்ள கோட்டங்களில் அமைந்துள்ளன.

இக்கோயில் அமைப்பைக்கொண்டு, இது கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் ஆண்ட இராசகேசரி பன்மரான ஆதித்தச்சோழரின் (871—907 கி. பி.) காலத்தில் கட்டப்பட்ட கோயில் என்று துணியலாம். இக்காலத்தைச்சேர்ந்த ஒரு துண்டுக் கல்வெட்டு கோபுர வாசலின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்காகக் கொடுத்த தானத்தை இது குறிக்கிறது.

இத்தலத்திலுள்ள அம்மன் கோயில் மதுரை மன்னராகிய சோணாடு வழங்கிய சுந்தர பாண்டியர் (பட்டம் கி. பி. 1216) காலத்தில் கட்டப்பட்டது. இம்மன்னரின் இரண்டு கல்வெட்டுக்கள் இக்கோயில் கருப்பகிரகச் சுவர்களில் (மேற்குப்பாகத்தில்) பொறிக்கப்பட்டுள்ளன. இப்பாண்டிய மன்னரின் ஏழாவது ஆண்டில் (1223 கி. பி.) (காவிரியின்) வடகரை விருதராஜ பயங்கர வளநாட்டு மண்ணிநாட்டுப் பிரஹ்மதேயம் கோட்டூர் மத்தியஸ்தர் கோட்டூர் உடையார் உதையஞ் செய்தார் விக்ந விநாயகரான செம்பியன் பல்லவரையன் என்பவர் திருக்காட்டுப்பள்ளி உடைய நாயனாருக்குத் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் அழகர் மங்கையாரை எழுந்தருளுவித்து, இந்நாயனாருக்குத் திருக்கற்றளியும் சாத்தினார். மேலும் செம்பியன் பல்லவரையர் இக்கோயிலின் நிவந்தங்களுக்காக மாறனேரியான தீனசிந்தாமணி சதுர்வேதிமங்கலத்திலும், முல்லைக் குடியிலும், வேண்டும் நிலத்தை அளித்தார்.

ஆறு ஆண்டுகளுக்குப்பிறகு இதே மன்னர் (கி. பி. 1229) மாறனேரியான தீனசிந்தாமணி,

ஒன்பதிற்றுவேலி, முல்லைக்குடி என்ற கிராமங்களிலுள்ள சில நிலங்கள் தேவதான இறையிலியாக வழங்கப்பட்டன.

அம்மன்கோயிலின் முன்பாகத்தில் தற்போது உள்ள மண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். அதில் நிற்கும் தூண் ஒன்றில் முதலாம் ராஜராஜருடைய (கி. பி. 985—1014) 13ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இத்தூணை எங்கிருந்து கொணர்ந்து இங்கே நிறுத்தினார்கள் என்று தெற்றெனத் துணியக் கூடவில்லை.

16ஆம் நூற்றாண்டில் ஆண்ட விஜய நகர ஆரவீடு வம்சத்தரசராகிய திருமலைதேவ மகாராயர், திருக்காட்டுப் பள்ளி உடையாருடைய பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாகச் சில இராசவரிகளை அளித்தார்.

இத்தலத்தைப்பற்றி கல்வெட்டுக்கள் மூலமாக மேல் குறிப்பிடப்பட்ட சில செய்திகளே நமக்குக் கிடைத் துள்ளன. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள நடராஜர், மாணிக்கவாசகர், சண்டிகேசுவரர் ஆகிய இவர்களுடைய செப்புத் திருமேனிகள் தோற்றப் பொலிவும் சிற்பத் திறமையும் வாய்ந்தவை.

(A. R. No. 52 of 1897) (Inscriptions on the west wall of the Soundara-Nayaki Shrine in the Agniswara Temple at Tirukattupalli, Tanjore Taluk, Tanjore Dt.)

ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் சோணாடு வழங்கிய சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு எ-வது மீன நாயிற்று பூர்வபக்ஷத்து நவமியும்.........யும் பெற்ற பூசத்து நாள் ரிஷப முகூர்த் தத்து உடையார் திருக்காட்டுப்பள்ளி உடைய நாய னார்க்கு திருக்காமக் கோட்டமுடைப் பெரிய நாச்சியார், அழகமர் மங்கையாரை எழுந்தருளிவித்து...............டை பண்ணி இந்நாச்சியார்க்கு திருக்கற்றளியும் சாத்தி திருச் செல்வம் வளர்க்க மாறனேரியான தீனசிந்தாமணிச்சதுர்

Tirukattupalli Agniswarar Temple



Manikkavasagar, Chandesvarar, Sambandar
& Appar alias Tirunavukkarasu
(early chola - 9th century A. D.)



Nataraja and his consort.

Ganesa Subrahmanya and his consorts.

வேதி மங்கலத்திலும் முல்லைக்குடியிலும் வேண்டும் நிலம் கொண்டு விட்டார் வடகரை விருதராச பயங்கர வள நாட்டு மண்ணினாட்டு பிரம்ஹ தேசம் கொட்டூர் மத்தியஸ்தர் கொட்டூருடையான் உதயஞ் செய்தார் விக்ந விநாயகரான செம்பியர்பல்லவரையன்.

(A. R. No. 53 of 1897 on the South Wall)

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் பாண்டி குலாசனி வளநாட்டு உடையார் திருக்காட்டுப்பள்ளி உடையார் கோவில் தேவ கன்மிக்கும் ஸ்ரீ மாகேஸ்வர கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீ காரியம் செய்வானுக்கும் இக் கோயில் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார் அழகமர் மங்கையார்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக இந் நாட்டு மாறனேரியான தீன சிந்தாமணிச் சதுர்வேதி மங்கலத்து திருநாமத்துக்காணியான நிலம் மூவேலி உட்பட ஒன்பத்திற்று வேலி நிலமும் முல்லைக் குடியில் திருநாமத்துக்காணியான நிலம் வேலியும் பதின் மூன்றுவது முதல் தேவதான இறையிலியாக இடக்கடவதாகப் பெற வேணுமென்று காங்கேயராயனும், சேதிராயனும் நமக்குச் சொன்னமையில் இப்படிச் செய்யக் கடவதாகச் சொல்லிக் கணக்கிலும் இட்டுக்கொள்ளக் கடவதாக வரிக்கூறு செய்வார்களுக்கும் சொன்னோம். இந்நிலம் பதின்மூன்றுவது முதல் தேவதான இறையிலியாகக்கொண்டு நிவந்தஞ் செலுத்தச் சொன்னோம். எழுதினான் திருமந்திர ஓலை இராஜ நாராயண மூவேந்த வேளான் இவை காங்கேயராயன் எழுத்து, இவை லங்கேஸ்வரன் எழுத்து, இவை சேதிகுலராயன் எழுத்து, இவை வாணதிராயன் எழுத்து, இவை விழுப்பாதிராயன் எழுத்து, இவை சி...ம் பெற்ற ராயன் எழுத்து, இவை பிருதிகங்கன் எழுத்து, இவை........... எழுத்து.

(A. R. No. 54 of 1897)

(On a pillar in the Mandapa in front of the same Shrine)

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலை கல மறுத்த கோவிராஜ ராஜ கேசரி பன்மற்குயாண்டு பதின்மூன்ருவது எயினுட்டுப் புரையாற் சேரி ஸ்ரீ காரியமாராயப்பெற்ற உடையார் பணிமகன் ஐயூர் கிழவற்காய் ஸ்ரீ காரியமாராய்கின்ற அம்பருடையான் வடமூஞ்சி நல்லூர் அடிகள் இவ்வூர் தேவதானம் கொற்றமங்கலத்து....பெருநான்கெல்லைக்குட் பட்ட நிலம்....ண்ணிலமொ....வின்றியே தூதுவன் கரம் பியன் காணிக்குடியாய் இந்நிலங்கொண்டு எண்ணுடிக் காலால் ஆண்டு வரை சத்திமுற்றத்து அளக்கக் கடவ திருச்சென்னடை நெல் 75 கலம்.

(A. R. No. 55 of 1897)

(In the second Gopura of the same temple, left of Entrance.)

விக்ரம வருஷம் மார்கழி 17உ ஸ்ரீமான் மகா மண்ட லேஸ்வரன் மெதினி மீசுர கண்ட கட்டாரி சாளுவ திருமலை தேவமகாதிராசர் திருக்காட்டுப்பள்ளி தானத்தார்க்கு நிருபம். தங்கள் கோயில் சூலவரி கொத்திலக்கை நாட்டுக் காணிக்கை நாட்டு......சிக்கம் ஊர்த்தலை ஆரிக்கம் புலவரி பிரதானி சோழ அதிகாரி சோழக் கணக்கர் சோழ கல்லணை காடுவெட்டு மற்றும் எப்பேற்பட்ட பல உபாதியும் சந்திராதித்தவரையும் சருவமானியமாக கழித்துவிட்ட அளவுக்கு உடையவர்க் கும் மகா பூசையும் திருப்பணியும் குறைவற நடத்தி சுகத்திலே யிருக்கவும்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் - கொல்லி

இராகம் - நவரோஸ் தாளம் - சாபு

1. வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி யுண்பதும் வெண்டலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே.

2. நிருத்தனுர் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
அருத்தனுர் அழகமர் மங்கையோர் பாகமாப்
பொருத்தனுர் கழலிணை போற்றுதல் பொருளதே.

3. பண்ணினுர் அருமறை பாடினுர் நெற்றியோர்
கண்ணினுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
விண்ணினுர் விரிபுனல் மேவினுர் சடைமுடி
அண்ணலார் எம்மையா ளுடையவெம் மடிகளே.

4. பணங்கொளு கம்மரைக் கார்ப்பது பல்பலி
உணங்கலோ டுண்கல னுறைவது காட்டிடைக்
கணங்கள்கூ டித்தொழு தேத்துகாட் டுப்பள்ளி
நிணங்கொள்சூ லப்படை நிமலர்தந் நீர்மையே

5. வரையுலாஞ் சந்தொடு வந்திழி காவிரிக்
கரையுலா மிடுமணல் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
திரையுலாங் கங்கையுந் திங்களுஞ் சூடியங்
கரையுலாங் கோவணத் தடிகள்வே டங்களே.

6. வேதனுர் வெண்மழு வேந்தின ரங்கமுன்
ஓதின ருமையொரு கூறன ரொண்குழைக்
காதினுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நாதனுர் திருவடி நாளுநின் றேத்துமே.

7. மையினுர் மிடறனுர் மானமழு வேந்திய
கையினுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
தையலோர் பாகமாத் தண்மதி சூடிய
ஐயனுர் அடிதொழ அல்லலொன் றில்லையே

8. சிலைதனுன் முப்புரஞ் செற்றவன் சீரினுர்
மலைதனுன் வல்லரக் கன்வலி வாட்டினுன்
கலைதனுர் புறவணி மல்குகாட் டுப்பள்ளி
தலைதனுல் வணங்கிடத் தவமது வாகுமே.

9. செங்கண்மால் திகழ்தரு மலருறை திசைமுகன்
தங்கையாற் றெழுதெழத் தழலுரு வாயினுன்
கங்கையார் சடையினுன் கருதுகாட் டுப்பள்ளி
அங்கையாற் றெழுமவர்க் கல்லலொன் றில்லையே.

10. போதியார் பிண்டியார் என்றவப் பொய்யர்கள்
வாதினுல் உரையவை மெய்யல வைகலும்
காரினுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
ஏரினுற் றெழுதெழ இன்பம்வந் தெய்துமே.

11. பொருபுனல் புடையணி புறவநன் னகர்மன்னன்
அருமறை யவைவல்ல அணிகொள்சம் பந்தன்சொல்
கருமணி மிடற்றினள் கருதுகாட் டுப்பள்ளி
பரவிய தமிழ்சொல்லப் பறையுமெய்ப் பாவமே.

TIRUKATTUPALLI AGNISWARAR TEMPLE



The shrine of the Goddess built in 1223 A. D. in the days of the Pandaya King Maravarman-Sundara Pandya (Acc 1216 A. D.)

A view of the North western pillar in the Garbhagraha.

Details of the Yali frieze in the basement and that of the Bhuta-ganas under the eaves.



Yoga Dakshinamurti.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

இராகம் - நாதநாமக்கிரியா **தாளம் - சாபு**

1. மாட்டுப்பள்ளி மகிழ்ந்துறை வீர்க்கெலாம்
கேட்டுப் பள்ளிகண் டீர்கெடு வீரிது
ஓட்டுப் பள்ளிவிட் டோடலு றுமுனம்
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே.

2. மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே.

3. தேனை வென்றசொல் லாளொடு செல்வமும்
ஊனை விட்டுயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதுங்காட் டுப்பள்ளி
ஞான நாயக னைச்சென்று நண்ணுமே.

4. அருத்த மும்மனை யாளொடு மக்களும்
பொருத்த மில்லைபொல் லாதது போக்கிடும்
கருத்தன் கண்ணுத லண்ணல்காட் டுப்பள்ளித்
திருத்தன் சேவடி யைச்சென்று சேர்மினே.

5. சுற்ற முந்துணை யும்மனை வாழ்க்கையும்
அற்ற போதணை யாரவ ரென்றென்றே
கற்ற வர்கள் கருதுங்காட் டுப்பள்ளிப்
பெற்ற மேறும் பிரானடி சேர்மினே,

6. அடம்புங் கொன்றையும் வன்னியு மத்தமும்
துடும்பல் செய்சடைத் தாமணிச் சோதியான்
கடம்பன் றாதை கருதுங்காட் டுப்பள்ளி
உடம்பி னார்க்கோ ருறுதுணை யாகுமே.

7. மெய்யின் மாசுடை யாருடல் மூடுவார்
பொய்யை மெய்யென்று புக்முடன் வீழன்மின்
கையின் மானுடை யான்காட்டுப் பள்ளியெம்
ஐயன் றன்னடி யேயடைந் துய்ம்மினே.

8. வேலை வென்றகண் ணாரை விரும்பிநீர்
சீலங் கெட்டுத் திகையன்மின் பேதைகாள்
காலை யேதொழுங் காட்டுப்பள் ளியுறை
நீல கண்டனை நித்தம் நினைமினே,

9. இன்று ளார்நாளை யில்லை எனும்பொருள்
ஒன்று மோரா துழிதரு மூமர்காள்
அன்று வானவர்க் காக விடமுண்ட
கண்ட னார்காட்டுப் பள்ளிகண் டுய்மினே.

10. எண்ணி லாவரக் கன்மலை யேந்திட
எண்ணி நீண்முடி பத்து மிறுத்தவன்
கண்ணு ளார்கரு துங்காட்டுப் பள்ளியை
நண்ணு வாரவர் தம்வினை நாசமே.

[S. R. B.]

எங்கள் ஊர்—திருக்காட்டுப்பள்ளி

O. N. இராதாகிருஷ்ணன்

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணுவதுஞ் சோழ மண்டலமே"

என்ற பெரியோர்களது புகழ்ச்சிக்குரியது சோழநாடு. அந்நாட்டில் புகழ்பெற்ற ஊர்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் எங்கள் ஊராகிய திருக்காட்டுப்பள்ளி. திருவெண்காட்டிற்குப் பக்கத்திலே இப்பெயரையே கொண்ட மற்ருெரு திருக்காட்டுப்பள்ளி இருப்பதால் எங்கள் ஊரை மேலைத் திருக்காட்டுப்பள்ளி என்று அழைப்பது வழக்கம். எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டது என்பதற்குத் 'திரு' என்ற அடைமொழி வந்திருப்பதே தக்க சான்ருகும். காவிரியின் கரையில் அமைந்துள்ள இவ்வூரின் சிறப்பினைச் சற்று ஆய்வோமாக.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்ற திருவாக்கை நன்குணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அதை அனுசரித்தே சோழமன்னர் காலத்தில் கட்டப்பெற்ற மிகப் புராதனமான ஒரு சிவன் கோவில் இருக்கின்றது. இக்கோயிலுக்கு முதல் இராஜராஜ சோழனும், முதல் சுந்தர பாண்டியனும் தேவதான நிலங்கள் பல கொடுக்கப்பட்டுள்ளன. இங்கெழுந்தருளியுள்ள இறைவனுக்கு வன்னிநாதர், அக்னீஸ்வரர், தீயாடியப்பர் என்றும் அம்பிகைக்கு, வார்கொண்ட முலையம்மை, சுந்தரநாயகி, அழகமர் மங்கை என்றும் பல் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இது சமயப்பெரியார்களான, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்ற இருவரின் பாடல் பெற்ற சிவஸ்தலமாகும். 'தாயைக் கண்ட கன்று போன்று ஞானசம்பந்தர் இறைவனை அணைந்து தேவாரம் பாடினர்,' என்று சேக்கிழார் இத்தலத்தைச் சிறப்பிக்கின்ருர். சூரியதேவனே இங்கெழுந்தருளியுள்ள இறைவனை நாள்தோறும் பூஜிக்கின்ருன் என்று நாவுக்கரசர் கூறியுள்ளார். இக்கருத்தை "காலையே தொழும் காட்டுப்பள்ளி" என்ற அடி

வலியுறுத்தும். மேலும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இங்கே எழுந்தருளி வீதியில் உப்பு விற்கும் ஒருத்தியுடன் அளவளாவினர் என்று கூறுவர். இனி இவ்வூரின் சிறப்பினைச் சரித்திரக் கண்கொண்டு பார்ப்போம்.

17-ஆம் நூற்றுண்டில் தஞ்சாவூரில் மஹாராஷ்டிர ராஜ்ஜியத்தை நிலைநாட்டியவனும், சிவாஜியின் தம்பியுமான வெங்கோஜி என்பான் தற்காப்பின் பொருட்டுத் தஞ்சையைச் சுற்றிப் பல கோட்டைகளைக் கட்டினன். அவற்றுள் ஒன்று திருக்காட்டுப்பள்ளிக் கோட்டையாகும். இன்றும் திருக்காட்டுப்பள்ளிக்குக் கோட்டை என்றும் பெயர் வழங்கப்படுகின்றது.

இனி 18–ஆம் நூற்றுண்டிலே ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த போரில் ஆங்கிலேயர் தஞ்சாவூரைக் கைப்பற்ற எண்ணிப் படையெடுத்து வந்தபோது, முதலாவதாகத் திருக்காட்டுப்பள்ளிக் கோட்டையையும் அதன் பக்கத்தே சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள பூதலூர்க் கோட்டையையும் பிடித்துத் தம் வசம் ஆக்கிக்கொண்டார்கள்.

அடுத்த சிலவாண்டுகளில் ஹைதர் அலி என்பான் படையெடுத்து ஆங்கிலேயரை முதுகிடும்படி ஓட்டிவிட்டு, இத் திருக்காட்டுப்பள்ளிக் கோட்டையைக் கைப்பற்றினன் என்று சரித்திரம் கூறுகின்றது. மேலும் சரித்திரச் சிலா சாஸனங்கள் மலிந்து நிற்கும் செந்தலை, நியமம் என்னும் ஊர்கள் இவ்வூரை யடுத்தடுத்து விளங்குகின்றன. அஃதன்றியும் இவ்வூரின் பெருமைக்குக் கண்ணுடியாக விளங்கி வருவது எங்கள் உயர்நிலைப்பள்ளியொன்றேயாகும். இப் பெரும் பள்ளியைத் தோற்றுவித்தவர் ஸ்ரீ சர். பி. எஸ். சிவசாமி ஐயர் K. C. S. I. C. I. E. அவர்களாவார்கள். ஏறக்குறைய மூன்று லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட இப்பள்ளி, பொதுவாக இவ்வூருக்கும், குறிப்பாக இவ்வூரின் தென்புறத்திற்கும் அழகளித்து நிற்கின்றது. அம் மகான் தம் மனைவியின் பெயரால் நிறுவிய **'கல்யாணி ஹாஸ்டல்'** என்ற உணவு விடுதியும், தம் தாயாரின் பெயரால் நிறுவிய **'சுப்பலட்சுமி மகளிர் பிரசவ விடுதியும்'** இப்பள்ளிக்கு அழ

கும், ஊருக்குப் பெருமையும் அளித்து அடுத்தடுத்து நிற்கின்றன.

ஏறக்குறைய எண்ணுயிரம் ஜனத்தொகையினையும், 40,575 ரூபாய் வருமானத்தினையும் கொண்ட முதல்தரப் பஞ்சாயத்து போர்டாக எங்கள் ஊர் விளங்குகிறது. வீட்டு வரி, வாகன வரி, தொழில் வரி, தமாஷா வரி முதலிய வரிகளால் வரும் வருமானத்தைக் கொண்டு இவ்வூர் நன்கு பரிபாலிக்கப்படுகின்றது. இப்பஞ்சாயத்து போர்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற எட்டு அங்கத்தினர்களும், ஒரு தலைவரும், ஒரு உபதலைவரும் இருக்கின்றனர். இவர்களுக்கு உதவியாக ஒரு நிர்வாகஸ்தரும் (Executive Officer) இருக்கின்றார்.

மேலும் இவ்வூரில், போலீஸ் நிலையம், ஆவணக்களரி, மருத்துவ நிலையம், தபால் தந்தி நிலையம், முதலியன இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளியே யன்றி பல ஆரம்ப உயர்தரப் பாடசாலைகளும் இருக்கின்றன. காவிரியும், கடைத்தெருவும் ஊருக்கு அழகூட்டி, உயிரூட்டி நிற்கின்றன.



ஸ்ரீ தேபர்

ஜி. ஸ்ரீநிவாஸன், V 'C'.

சமீபத்தில் ஆவடியில் இந்திய தேசியக் காங்கிரஸின் 60-ஆம் ஆண்டு பொதுக் கூட்டம் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. அச்சமயம் காங்கிரஸ் வானில் ஓர் புதிய நட்சத்திரம் தோன்றியது. அதுவே உச்சரராங்கராய் நவல் சங்கர் தேபர். இம்மாபெரும் ஸ்தாபனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தேபர் ஓர் ஏழை குமாஸ்தாவாகத் தம் வாழ்க்கையை ஆரம்பித்தார் என்பது வியப்புக்குரிய விஷயம். அவர் ஒரு நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர். அவ்வகுப்பின் சுகதுக்கங்களைத் தம் சொந்த அனுபவ வாயிலாகவே அறிந்தவர். அவருடைய இலட்சியம் இவ்வகுப்பாரின் இன்னல்களைப் போக்குவதேயாகும்.

ஸ்ரீ தேபர் சௌராஷ்டிர ராஜ்யத்தில் கங்காஜாலா (Ganga-jala) என்ற கிராமத்தில் 1905-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் நாள் பிறந்தார். இவர் தகப்பனார் நவல் சங்கர் விரஜலால் தேபர்; தாயார் உஜாம்பாய். இவர் கத்தியவார், நாகர் வகுப்பைச் சேர்ந்தவர். இவருடன் பிறந்தவர்கள் ஐந்து சகோதரிகளும், இரண்டு சகோதரர்களுமாவர். இவருடைய ஒன்பதாவது வயதிலேயே இவர் தாயார் காலமானார். எனவே இவருடைய தந்தையே இவருடைய வாழ்க்கையின் வழிகாட்டியாக இருந்தார்.

தேபருடைய ஆரம்பக் கல்வி ராஜ்கோட் தாலுக்கா ஸ்கூலில் நடைபெற்றது. ஓராண்டுக்குப் பிறகு பம்பாயிலுள்ள டூடோரியல் ஹைஸ்கூலில் சேர்ந்தார். தாயார் இறந்த பிறகு மீண்டும் ராஜ்கோட் சென்று கல்வி பயின்றார். ஆகவே ராஜ்கோட்டிற்கும் பம்பாய்க்குமிடையே அடிக்கடி மாறிக்கொண்டிருந்தார். விடாமுயற்சியினால் 1922-இல் ராஜ்கோட்டிலுள்ள சௌராஷ்டிர ஹைஸ்கூலில் இருந்து மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். அவருடைய தகப்பனார் அவரைப் பம்பாய் அர்ச்-சேவியர் கல்லூரியில் சேர்த்தார். ஆனால் முதல் வருட இறுதித் தேர்வில் தோல்வியடையவே அவரு

டைய கல்லூரிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது.

தேபர் பம்பாய் சட்ட நிபுணர்கள் ஹீராலால் அண்ட் கம்பெனியில் குமாஸ்தாவாக வேலைக்கமர்ந்தார். தளரா ஊக்கத்தால் தலைமைக் குமாஸ்தாப் பதவியைச் சீக்கிரமே அடைந்தார். வேலை பார்த்த 4½ வருட காலத்தில் கி. பி. 1928–ஆம் ஆண்டில், தனியே படித்துப் பம்பாய் உயர்தர நீதிமன்ற வக்கீல்கள் பரீட்சையின் ஒரு பிரிவான ஹிந்து சட்டப் படிப்பில் விசேஷ கௌரவத்தோடு தேர்ச்சி பெற்றார். பரீட்சைக்குச் செல்லும் சமயத்தில் அவர் தகப்பனார் நோய்வாய்ப்பட்டிறந்தார்,

1928–ல் சட்டப் பரீட்சையில் தேர்ச்சி அடைந்த பிறகு ராஜ்கோட் திரும்பினார். தம்முடைய 24–ஆம் வயதில் தனியாக வக்கீல் தொழில் செய்ய ஆரம்பித்தார். "வழக்குகளைத் தூண்டிவிடாமல் சமாதானம் செய்விக்கும் துறையில் வழக்கறிஞருக்கு நல்ல மனிதராக வாழச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன." என்ற ஆப்ரஹாம் லிங்கனின் குறிக்கோளைத் தம்முடைய தொழிலில் பின்பற்றினார். அதே சமயத்தில் அவர் பல நூல்கள் படிக்க ஆரம்பித்தார். அவருடைய மனத்தைக் கவர்ந்த நூல் டால்ஸ்டாயின் "பின் நாம் என்ன செய்யவேண்டும்?" (What then we have to do?) என்பதேயாம்.

திடீரென 1936–ஆம் ஆண்டு ஒருநாள் தம் தொழிலைத் துறந்து கிராமங்களுக்குச் சென்று சமூக சேவையில் ஈடுபட நினைத்தார். ராஜ்கோட்டிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள தூராலா என்னும் கிராமத்தைத் தம்முடைய நிர்மாண வேலைகளுக்காகத் தேர்ந்தெடுத்தார். மகாத்மா காந்தியடிகளின் ஆசியும் இதற்குக் கிடைத்தது. அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில் பைஜ்பூர் என்ற இடத்தில் காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது. அவ்வமயம் சர்தார் வல்லபாய் படேலைச் சந்தித்து அவருடைய நெருங்கிய நண்பரானார். அவ்வமயம் கி. பி. 1935–ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் கீழ் நாடெங்கும் தேர்தல்கள் நடைபெற இருந்தன. தேர்தல் பிரசார வேலையில் தேபர் தீவிரமாக ஈடுபட்டார்.

தொழிலாளர்களுக்காக இவர் செய்த தொண்டு மிகச் சிறந்

தது. ராஜ்கோட்டிலுள்ள ஒரு பருத்தி ஆலேயில் தேர்தல் வேலேயில் ஈடுபட்டதற்காக அவ்வாலேயின் தொழிலாளர் சங்க அங்கத்தினர்களே ராச்சியத்தை விட்டு வெளியே செல்லும்படி அரசாங்கம் உத்தரவிட்டது. தேபரின் குறுக்கீட்டால் இவ்வுத்திரவு ரத்து செய்யப்பட்டது.

தேபர் இரண்டாவது கத்தியவார் அரசியல் மகாநாட்டைக் கூட்டினுர். அவ்வமயம் ராஜ்கோட் திவானும், அரசரும் இலண்டன் சென்றிருந்தார்கள். அவர்கள் திரும்பி வந்ததும் காரணமின்றி அவர்களேச் சிறையிலடைத்தார்கள். சர்தார் படேல் உள்பட பல தலேவர்கள் இச்செய்கையைக் கண்டனம் செய்தார்கள். கி. பி. 1938–39–இல் நடந்த இராஜ்கோட் சத்தியாக்கிரகத்தில் தேபர் தலேமை தாங்கி நடத்தினுர்.

செளராஷ்டிரத்தில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டபொழுது பல ஜில்லாக்களில் பிரயாணம் செய்து, நிவாரண வேலேகளில் முழு மனத்துடன் ஈடுபட்டார். 1941–இல் வீராம்காமல் என்ற இடத்தில் தனி நபர் சத்தியாக்கிரகம் நடத்துவதற்காக மகாத்மா காந்தியடிகளால் இவர் அனுப்பப்பட்டார். அதன் காரணமாகச் சிறை சென்றபொழுது, சிறையில் தற்பொழுது செளராஷ்டிர முதன் மந்திரியாக விருக்கும் ரஸிக்லால் பரீக், காங்கிரஸ் காரியதரிசி பலவந்தராய் மேத்தா முதலியவர்களேச் சந்தித்தார். இவர்கள் செளராஷ்டிரத்தின் ஐக்கியத்திற்காகவும் சீரமைப்பிற்காகவும் சிறையிலேயே பல திட்டங்களே வகுத்தார்கள்.

1946–இல் நவம்பரில் தேபர் கத்தியவார் அரசியல் மகாநாட்டைக் கூட்டினுர். இதன் முக்கிய நோக்கம் செளராஷ்டிர ஐக்கியத்தை ஏற்படுத்தி மக்களுக்கு அதிகாரத்தை மாற்றுவதேயாகும். தேபர் ஒவ்வொரு சமஸ்தானத் தலேவரையும் சந்தித்து ஐக்கியத்தின் அவசியத்தை வற்புறுத்தினுர்.

இந்தியா சுதந்திரமடைந்தபொழுது ஜுனுகாத் நவாப் தம் நாடு பாக்கிஸ்தானுடன் சேர்ந்து விட்டதாகப் பிரகடன செய்தார். அதை ஜுனுகாத் மக்கள் எதிர்த்தனர். தேபரின் ஆலோசனேயின் பேரில் மக்கள் அதிகாரத்தை நவாபினிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். நவாப் பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார்.

தேபரின் தீவிர முயற்சியால் கத்தியவாரின் ஐக்கியம் ஏற்பட்

டது. இதன் தலைவராக நவ நகர் ஜாம்சாகேப் தேர்ந்தெடுக் கப்பட்டார். அவரும் தேபரும் மகாத்மா காந்தியை அழைக்க டெல்லி சென்றபொழுது பிர்லா மாளிகையில் தங்கினர். தோட் டத்தில் குண்டு வெடிக்கும் சப் தம் கேட்டது. (1948-ஆம் ஆண்டு ஜனவரி 30.) பின்னர் 1948 பிப்ரவரி 15-இல் சர்தார் வல்லபாய் படேல் ஐக்கிய சௌராஷ்டிர இராச்சியத்தை ஆரம்பித்து வைத்தார். புதிய இராச்சியத்தின் அரசியல் தலைவ ராக ஸ்ரீதேபர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

முதன்மந்திரியாக இருக்கும் பொழுது ஸ்ரீ தேபர் சிறந்த சேவைகள் செய்தார். அவற் றுள் முக்கியமானவை விவசாயி களுடைய நிலஉரிமைகள் பாது காப்பும், விவசாயக் கடன் நிவா ரணச் சட்டமும், கிராஸ்தார்கள் என்ற வகுப்பாரின் அட்டகாச ஒடுக்கமும் ஆகும். சௌராஷ் டிரத்தில் தேபர் அமைதியை நிலைநாட்டினர். பல குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய் தார்.

இந்திய தேசீய காங்கிரஸின் அழைப்பிற்கிணங்கி இப்பதவி யைத் துறந்து, துன்பங்களும் பொறுப்புக்களும் நிறைந்த காங்கிரஸ் அக்ராஸனர் பத வியை ஏற்றிருக்கிறார்.

மனிதருள் மாணிக்கமான நேரு இப்பதவியிலிருந்து எண் ணிறந்த சேவைகள் செய்திருக் கிறார். உழைப்பினாலேயே உன் னத நிலைக்கு வந்த உச்சராங்க ராய் தேபர் இன்று இப்பதவியை அலங்கரித்திருப்பதிலிருந்து குடி யரசிலுள்ள ஒவ்வொரு மனித னும் சீலத்தாலும், ஊக்கத்தா லும், உழைப்பாலும் உயர் வடையமுடியும் என்பது உள் ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றது. "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என் பார் பெரியோர், அதற்கிணங்க ஆந்திரத்தேர்தலில் வீர முழக்கம் செய்தார். காங்கிரஸ் வெற்றிக் கொடியை நாட்டியது; அமைதி யான வாழ்வுக்கு வழிதேடியது. புனிதமான காங்கிரஸ் ஸ்தாப னம் காலத்தாலும், சீலத்தா லும், ஞானத்தாலும் சிறந்த இத்தகைய தலைவர்களைப் பெற்று வழி வழி வாழ்க!

SIR ALEXANDER FLEMING

(1881 - 1955)

Sir Alexander Fleming was the inventor of **Penicillin**. He was a Scot, born in Ayrshire in 1881. He graduated from St. Mary's Medical School, London. He spent his life in teaching and research at St. Mary's, and at the London University. He also served as a Captain in the British Army Medical Corps in World War 1.

While experimenting with the anti-septic properties of vegetable moulds, he made his sensational discovery of Penicillin in 1942. Ever since, he has been hailed as the greatest benefactor of mankind along with Madame Curie and Louis Pasteur. As its value to medicine became known to the public, honours were heaped on him from every quarter. He was knighted in 1944. In 1945, he was awarded the Nobel Prize for Medicine along with Professors H. W. Florey and Earnest Chain of the Oxford University.

Under a scheme of the World Health Organisation, he came to **India** in 1953, and stayed for two months to give higher training to medical students in the Universities of Madras and Bombay. He died suddenly of heart failure at his London residence at the age of 73. In him, the world has lost a great benefactor of mankind.

S.

The Mettur Reservoir.

The Mettur Reservoir.

Bhavani Sagar - Outlet

Excursion to Mettur and Bhavani Sagar

1954

During the last Pongal holidays a party of 72 (64 Students and 8 Teachers) went on an excursion to Mettur and Bhavani Sagar. The party left the School in the evening of 31-12-'53 and reached Erode at 3 a. m. the next day. Arrangements were made in the Sengunthar High School for the party to halt.

1—1—'54 At 5-30 a. m. the party left by Special Bus for Mettur. On the way the members had a plunge iu the Cauvery at Bhavanikudal and then they visited the temple on its bank. After breakfast the party resumed their journey and reached Mettur at about 9-O'clock. The party directly went up the dam, took some snaps of the natural view there, and then went to the Governor's Tower, where they learned every thing about the History of the Dam. Then they came down and were taken to the tunnel work at the bottom of the Dam.

After a brief stay in the Park, the party went to the Mettur Chemicals, the Power-House, the Water Works, the Sandal-wood Factory and the Fish-curing centre.

At about 1-O'clock they had their dinner and after a short rest, the party started for Erode, alighting on the way at Manickampalayam for lunch, provided by one of the old pupils of our School.

2—1—'54 At 6 a. m. the party left for Bhavani Sagar, about 57 miles from Erode. The dam was reached at about 9-30 a. m. It took about three hours for the party to go round

the dam site and observe the works of interest there. One of the officers there was specially deputed to take the party round and explain everything.

After dinner the party resumed their return journey at about 3 p. m. and after a brief halt at Sathyamangalam to hear the lecture on Kamba Ramayanam of Sri. K. V. Jagannathan, they arrived at Erode at 7 p. m. After supper the party entrained at Erode and reached Budalur at 5-30 a. m. on 3—1—'54.

The Upper Bhavani Scheme was planned in 1834 by Sir Arthur Cotton for the production of Hydro-electric-power twelve miles up the river from Mettupalayam. But the plan was given up due to the construction of the Mettur Dam which is both an irrigation project and hydro-electric project. The prevalence of famine conditions in South India due to the failure of both the monsoons necessitated the construction of Lower Bhavani Project in the Bhavani river.

This is a copy of the Tennesse valley Project in the U. S. A. where both earth - work and R. C. work are combined. The Dam is nearly $5\frac{3}{4}$ miles long with earth masonry work of $2\frac{1}{2}$ miles on the left side, $2\frac{3}{4}$ miles on the right side and half a mile R. C. work in the middle. The work was begun in Oct. 1948 and was completed before the prescribed time. Expenses increased to 10 crores due to the import of foreign machinery.

The cost of Dam work is Rs. 580 lacs and that of channel constructions 420 lacs. The Canal proper is 43 ft. above the river-bed. Five sluices control the flow of water in the Canal. The width of the Canal is 110 feet and its depth 10 feet and length of the main Canal 121 miles.

2,70,000 acres of waste lands lying in the Taluks of Ghobi, Bavani, Erode, Dharapuram & Karur will be brought under irrigation by this Scheme. Of this, fifteen thousand acres are allotted for paddy cultivation and the rest for cotton and other punja products. Forty thousand acres have been now brought under cultivation. The taxes levied are as follows (1) Betterment tax Rs. 100 per Acre, (2) Water tax Rs. 125 per Acre, so that 4½% of the total expenditure is expected to be collected every year by way of taxes.

Dam Height 138·3 ft.

Water level 123'

Water Spread over 30 sq. miles. catchment area 1621.5 sq miles. Quantity of water stored 32800 million c. ft. The water brought by Moyaru also is stored up by this dam.

River bed level	797 ft.
Full reservoir level	920 ft.
Maximum water-level	920 ft.
Top of Dam	935 ft.
Length of Canal	121 miles
Cost of Dam	580 Lacs.

(less 80 lacs machines)

Period 1948—53.

ஹெலன் கெல்லர் (Helen Keller)

R. ராதாகிருஷ்ணன்

ஐந்தாம் பாரம் 'இ' பிரிவு

"அரிது அரிது மானிட ராதல் அரிது;
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது."

என்பது ஔவையாருடைய வாக்கு. ஆனால் பலர் ஐம்புலன்களைப் பெற்றிருந்தும், நடைமுறையில் குருடராய்ச் செவிடராய், ஊமையராய் வாழ்கின்றனர். பிறந்த சில மாதங்களுக்குள்ளேயே பார்வை, கேள்வி, பேச்சு இம்மூன்றையும் இழந்து இருபத்தைந்து வயது வரையில் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டு, அதில் வெற்றியையுங் கண்டு தம்மைப்போன்ற ஏனையவருக்குந் துன்பந் துடைத்து இன்பம் காணும் முறையையும் கூறிவருகின்ற அம்மையார் உலகப் பெரியார்களில் ஒருவராக விளங்குகிறார் என்றால் அவரது செயல் வியக்கத்தக்க செயலேயாகும். அப் பெரியாரே சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க மாது ஹெலன் கெல்லராவார். இவரது வாழ்க்கையின் குறிக்கோள் தம்மைப்போல் சக்தியற்றவர்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதேயாகும். மூன்று முக்கியப் புலன்களை இழந்திருந்த போதிலும் பயனுடையதும் இன்பம் தரத்தக்கதுமான வாழ்க்கையை ஒருவர் நடத்தலாம் என்பதை இவருடைய வாழ்க்கை நிரூபிக்கின்றது. குறைபாடுடையவர்கள் தங்கள் குறைகளைப் போக்குவதற்குத் "தன் கையே தனக்குதவி" என்ற கொள்கையைப் பின்பற்றவேண்டும்.

ஹெலன் கெல்லர் அம்மையார் 1880-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அலபாமா மாகாணத்தில் பிறந்தார். இவரது இரண்டாவது வயதில் ஏற்பட்ட விஷஜுரத்தின் பலனாக இவர் கண் குருடாயின; காது செவிடாயின; வாய் ஊமையாகியது. சிறுவயது முதற்

A. C. C. at Social Work - The Headmaster Inaugurates

A. C. C. Social Work. The Cadets at work

The School Excursion Party at Bhavanisagar

கொண்டு இவருக்கு வழிகாட்ட ஆன் சல்லிவன் (Anne Sullivan) என்ற அம்மையார் முன் வந்தார். சிறு வயதிலேயே பயத்தை நீக்குவதற்காக ஹெலன் கெல்லர் ஒரு சர்க்கஸ் கம்பெனியிலுள்ள கரடிகளிடமும், யானைகளிடமும், பாம்புகளிடமும் விளையாடுவதற்கு விடப்பட்டார். ஆகையால் இவருக்கு நாளடைவில் பயம் என்றால் என்னவென்று தெரியாமல் போயிற்று. இவர் தம்முடைய முயற்சியாலும் ஆன் சல்லிவரின் ஊக்கத்தாலும் 18ஆவது வயதிற்குள் அல்ஜீப்ரா, ஜியாமெட்ரி, பௌதிகம், இயற்கைத் தாவர நூல், மிருக சாஸ்திரம், தத்துவம் முதலிய நூல்களைக் கற்றுணரலானார். ஆங்கிலம் தவிர பிரஞ்சு, ஜெர்மன், லத்தீன் பாஷைகளையும் இவர் கற்றார். ஹார் வார்டு (Harvard) சர்வ காலாசாலையின் ஒரு பிரிவான ராட்கிளிப் (Radcliffe) கலாசாலையில் ஆனர்ஸ் பரீட்சையில் தேர்வடைந்தார். குதிரையேற்றம், சைக்கிள் விடுதல், சீட்டு விளையாடுதல், சதுரங்கம் விளையாடுதல் முதலியவைகளிலும் பயிற்சி பெற்றார். இவற்றிலிருந்து ஹெலனின் அதிசயிக்கத்தக்க ஞாபக சக்தியும், தளரா ஊக்கமும் தெரிய வருகின்றன. ஆரம்ப நாட்களில் பிரைலி (Braille) முறையில் எழுதப்பட்ட புத்தகங்கள் அதிகம் இல்லை. ஆகவே ஹெலன் எல்லாப் புத்தகங்களையும் எழுத்துக் கூட்டிக் கற்றுணர்ந்தார்.

பல நாடுகளிலுள்ள குருடர்கள், செவிடர்கள், ஊமையர்கள் ஆகியவர்களது நிலைமையை ஆராய்ச்சி செய்து அறிவதற்காகத் தற்சமயம் இவர் உலகச் சுற்றுப் பிரயாணம் செய்கின்றார். இந்திய அரசாங்கம் நம் நாட்டின் குருடர்களின் கல்வி முறையை எப்படி அமைப்பது என்பதைப் பற்றி ஆலோசனை கூற இவரை அழைத்திருக்கின்றது. இவருடைய உலகச்சுற்றுப் பிரயாணங்களில் இவருக்குத் துணையாக இருப்பவர் பாலி தாம்ஸன் (Polly Thomson) அம்மையார். இவ்வம்மையார் மூலமாகத்தான் ஹெலன் கெல்லர் வெளியுலகுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார். பாலி தாம்ஸன் பேசும்பொழுது ஹெலன் தம்முடைய வலது கையை அவரது முகத்தில் வைத்துக் கொள்ளுகிறார். மூன்று விரல்கள் தாம்ஸனின் தொண்டை, உதடுகள், மூக்கு ஆகியவற்றில் முறையே வைக்கப்படுகின்றன. பாலி தாம்ஸன் பேசும் பொழுது ஏற்படும்

ஒலி அதிர்வுகள் மூலம் ஹெலனின் விரல்கள், என்ன பேசப்படுகிறது என்பதை உணருகின்றன. ஹெலன் பேசும்பொழுது மற்றவர்கள் புரிந்துகொள்ளும் அளவிற்குப் பாலி தாம்ஸன் அதைத் தெளிவுபடுத்துகிறார்.

ஹெலன் கெல்லரின் அதிசயிக்கத்தக்க, உணர்ந்துகொள்ளும் சக்தியைப்பற்றிப் பல சம்பவங்கள் கூறப்படுகின்றன. லண்டன் மாநகரில் இவர் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றதும் இலைகளின் வாசனை மூலம் அது 'கிரீன் பார்க்' (Green Park) என அறிவித்தார். மற்றொரு சமயம் இவரும் பாலி தாம்சனும் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபொழுது 'ஒரு ஓவியர் பஸ்ஸில் ஏறியிருக்கிறார்' என்று இவர் கூறினர். இவர் கூறியபடியே 20 அடியுள்ள பஸ்ஸில் ஒரு முனையில் ஒரு ஓவியர் நின்றுகொண்டிருந்தார். டில்லியில் இவ்வம்மையார் ஸ்ரீ நேருவின் அனுமதி பெற்று அவரது முகத்தைத் தம் கையால் தடவிப் பார்த்து, "இவர் ஒரு மேதை; உலக சமாதானத்திற்காகப் பாடுபடும் உத்தமர்" என்று புகழ்ந்தார். இவர் பல சர்வ கலாசாலைகளில் பல பிரசங்கங்கள் நிகழ்த்தியிருக்கிறார். இவர் இத்தாலிக்குச் சென்றபொழுது மைக்கேல் ஆஞ்சலோவின் (Michael Anjalo) சிற்பங்களைப் பார்வையிட்டார். அச்சிற்பங்களைக் கையினால் தொட்டே அவற்றின் சிறப்பை உணர்ந்தார். பல பாட்டுக்களையும் இம்முறையிலேயே கற்றிருக்கிறார். தம்முடைய துரதிர்ஷ்டத்தை இவர் உண்மையில் ஒரு அதிர்ஷ்டம் என்றே கருதுகின்றார். கவனத்தைத் திருப்பக்கூடிய பார்வையும், கேள்வியும் இல்லாததால் முழு மனத்துடனே இறைவனை வழிபடுவதற்குச் சாத்தியமாகிறது என்பது இவரது துணிபாகும்.

இவரைப்பற்றிப் பல அறிஞர்கள் பலவிதங்களில் புகழ்ந்திருக்கின்றார்கள். மார்க் ட்வைன் (Mark Twain) என்ற அமெரிக்கக் கதாசிரியர் இவரை நெப்போலியனுக்குச் சமமாக ஒப்பிட்டார். விக்டோரியா மகாராணியார் இவரிடம் அளவு கடந்த அன்புகொண்டிருந்தார். ஐன்ஸ்டைன் (Einstein) என்ற விஞ்ஞான மேதை கெல்லர் மனித சக்திக்கு மேம்பட்டவர் எனக் கூறுகிறார். வில்லியம்ஜேம்ஸ் என்ற அமெரிக்கத் தத்துவஞானி "சுருக்கமாகக் கூறின் ஹெலன் கெல்லர் ஒரு வரப்பிரசாதமே" என்றார். ●



Formal opening of the Sivaswamipuram Higher Ele. School
(18—8—54)



The Braille - method - Alphabet.

கைத்தறி நெசவு

R. ஸ்ரீநிவாஸன், V 'C'.

"சிந்து" என்ற பதத்திற்கு 'பருத்தி' என்று பொருள். அது விளைகின்ற நாடு சிந்து நாடு. இந்நாட்டைப் பாரசீகர் "இந்தாய்" என்று அழைத்தனர். அதுவே மருவி "இந்தியா" என்று வழங்குகின்றது. ஆகவே நம் நாட்டிற்குப் பெருமை பருத்தி விளையும் நாடு என்பதாலேயே. இந்தியாவே பருத்தியின் தாயகம் என்றால் இத்தொழிலின் முக்கியத்துவம் தெரியவரும். மேலும் டாக்கா மஸ்லின் துணிகளும், மசூலிப்பட்டினச் சீட்டித் துணிகளும், காஷ்மீரச் சால்வைகளும் ரோமாபுரி வரை சென்றன.

இந்தியா, சீனா, அரேபியா நாடுகளோடு நடைபெற்ற வியாபாரப் பெருக்கால் 100 மிலியன் செஸ்டர்சுகள் (Sesterces பத்து லட்சம் பவுனுக்கு மேற்பட்ட) பெறுமானமுள்ள பொன், வெள்ளி நாணயங்கள் ரோம சாம்ராஜ்யத்திலிருந்து ஆண்டு தோறும் கழிந்து போயின என்று மூத்த பிளினி (The Elder Pliny) முறையிட்டிருக்கிறார். இந்திய மஸ்லின்களே இவ்விந்திய ஏற்றுமதிகளில் முக்கியமானவை. எனவே இந்தியப் பண்டைக்கால நெசவுத்தொழிலின் பெருமை ஒருவாறு தெரியவரும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவின் முக்கியத் தொழிலாக இது விளங்கி வருகிறது. இதில் ஈடுபட்டிருப்போர் சுமார் ஒன்றரைக் கோடிப்பேர்.

ஆனால் இன்று இந்த உன்னதமான தொழில் பல கஷ்டங்களுக்கு உள்ளாகியதால், பல நெசவாளர்கள் பிச்சை எடுக்கும் நிலையை அடைந்திருக்கிறார்கள். சமீபத்தில் இராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து பல நெசவாளர்களின் குடும்பங்கள் வேலை தேடி நம் ஜில்லாவிற்கு வந்தது ஞாபகமிருக்கலாம். இவர்களுடைய கஷ்ட நிலை உச்சத்தை அடைந்தது,

1952-ல்தான். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமான காரணம் மில் துணிகளின் போட்டியே யாகும். பம்பாயிலுள்ள பருத்தி மில்கள் குறைந்த விலைக்கு அதிகமான துணிகளை உற்பத்தி செய்கின்றன. அடுத்தபடியாக நெசவாளர்கள் தங்கள் பொருள்களுக்குத் தகுந்த விற்பனை வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே கைத்தறித் துணிகள் மலைபோலக் குவிந்தன. வாங்குவோர் யாருமில்லை. மூன்றாவதாகக் கைத்தறி நெசவாளர்கள் ஒற்றுமையின்மையால் கஷ்டப்படுகிறார்கள்.

இவர்களுடைய கஷ்டங்களைப் போக்கப் பலவழிகள் தேடப்பட்டன. முதல் உலக மஹாயுத்தத்திற்குப் பிறகு நெசவாலையின் உற்பத்தி நூறு கோடி கஜமாக உயர்ந்தது. இரண்டாவது உலக மஹாயுத்தத்திற்குப் பிறகு ஐந்நூறு கோடி கஜமாகப் பெருகியது. ஆகையால் கைத்தறித் துணி உற்பத்தி 1943ல் 170 கோடி கஜத்திலிருந்து 120 கோடி கஜமாகக் குறைந்துவிட்டது. இப்போட்டியைத் தவிர்ப்பதற்குப் பல யோசனைகள் கூறப்பட்டன. ராஜாஜி சென்னை முதலமைச்சராக இருந்த போது 'வேஷ்டி, புடவைகளின் உற்பத்தியைக் கைத்தறிகளுக்கே ஏகபோக உரிமையாக விட்டுவிடவேண்டும்; மில்கள் உற்பத்தி செய்யக் கூடாது' என்று கூறினார். ஆனால் இந்திய சர்க்கார் இதை ஒப்புக்கொள்ளாமல் மொத்த வேஷ்டி உற்பத்தியில் 40 சதவீதம் மாத்திரம் கைத்தறி நெசவிற்கு ஒதுக்கி வைத்துள்ளது.

மற்றொரு வழி பொருளுதவி. நெசவாளர்களுடைய பொருளாதார நிலையைச் சீர்படுத்தவும், கைத்தறி உற்பத்திக்கு ஊக்கமளிக்கவும் பொருளுதவி அவசியம். இப்பொருளுதவியைக் கைத்தறித் துணி விற்பனையை அதிகரிப்பதன் மூலமாகவே பெறவேண்டும். அதற்கு முதற்படியாகக் கைத்தறித் துணியின் விலையை மில்துணியின் விலைக்குச் சமமாகச் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதற்குத் தற்சமயம் அர

சாங்கம் மான்யங்கள் கொடுத்துக் கைத்தறித் துணியின் விலையில் ரூபாய்க்கு $1\frac{1}{2}$ அணு கழிவு கொடுத்துள்ளார்கள்.

